# 08 புத்திசாலிப் புறா

ஓர் அடர்ந்த காட்டுக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதில் புறாக் கூட்டம் வாழ்ந்து வந்தது. மரத்தின் அடியில் இருந்து கொடி ஒன்று வளர்ந்து வந்தது. அந்தக் கூட்டத்தில் புத்திசாலிப் புறா ஒன்று இருந்தது. புத்திசாலிப் புறா மற்றப் புறாக்களை அழைத்து வாருங்கள்!" அந்தக் கொடியை உடனே அழித்து விடுவோம்" என்றது. மற்றப் புறாக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.



சில மாதங்களில் அந்தக் கொடி நன்கு வளர்ந்து மரத்தின் உச்சி வரை படர்ந்து விட்டது.

ஒரு நாள் புறாக் கூட்டம் இரை தேடிச் சென்றது. அப்போது வேடன் ஒருவன் புறாக்களைப் பிடிக்க எண்ணிக் கொடியின் மேல் ஏறி வலையை விரித்தான். இரவு வீடு திரும்பிய புறாக்கள் வலையில் சிக்கின. சிக்கித் தவித்த புறாக்கள் வலையில் இருந்து தப்பிக்க என்ன செய்வது? என்று புத்திசாலிப் புறாவிடம் யோசனை கேட்டன. அதற்குப் புத்திசாலிப் புறா நாளை வேடன் வரும் நேரம் அனைவரும் இறந்தவர்கள் போல் நடிப்போம் என்றது. அனைத்துப் புறாக்களும் அதனை ஏற்றுக் கொண்டன. புத்திசாலிப் புறா மீண்டும் கூறியது வேடன் நம்மைத் தூக்கி எறிந்து விடுவான். பின்னர் எல்லோரும் பறக்கலாம் என்றது.

அடுத்த நாள் வேடன் வந்து பார்த்தான். அனைத்துப் புறாக்களும் இறந்தவை போல் கிடந்தன. வேடன் புறாக்களை வெளியே எடுத்து எறிந்தான். பின்னர் அனைத்துப் புறாக்களும் ஒன்றாகப் பறந்தன. புத்திசாலி புறாவின் சொல்லைக் கேட்டு நடந்ததால் எல்லாப் புறாக்களும் உயிர் தப்பின.

**பெரியோர் சொற்கேட்டு நடந்தால் நன்மையே.**
**වැඩිහිටියන්ගේ බසට කීකරු වෙමු.**

## செயற்பாடு 01

மாணவர்களை உரத்து வாசிக்க வழிப்படுத்தல்.

## செயற்பாடு 02

**பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புவோம்.**
**සුදුසු වචන යොදා හිස්තැන් පුරවන්න.**

| | | |
|---|---|---|
| புறாக்கள் | ஒன்றாகப் | படர்ந்தது |
| இறந்தவர்கள் | நன்மையே | |

1. கொடியானது ஆலமரத்தின் அடியிலிருந்து வளர்ந்து படர்ந்தது.
2. அனைத்துப் புறாக்களும் ..................... பறந்தன.
3. நாம் .................. போல் நடிப்போம்.
4. பெரியோர் சொற்கேட்டு நடந்தால் ...........................
5. வீடு திரும்பிய ........................ வலையில் சிக்கின.

வகுப்பறையில் மாணவர்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்துச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.



மாணவர்களே,
கை தட்டுங்கள்!



புத்தகத்தை எடுங்கள்!



திரும்பிப்
பாருங்கள்!



இங்கே வாருங்கள்!



மாணவர்களே
கை கட்டுங்கள்!



## செயற்பாடு 03

**உருவங்களில் உள்ள சொற்களை இணைத்து அறிவுறுத்தல்களை எழுதுவோம்.**

**දී ඇති වචන ඈඳා අර්ථවත් වාක්‍ය සාදන්න.**

நன்றாக

போல்

பாடத்தை

வரும்வரை

இருங்கள்

படியுங்கள்

நடவுங்கள்

நடியுங்கள்

வேடன்

இறந்தவர்கள்

சொற்படி

பெரியோர்

**உதாரணம்:** பெரியோர் சொற்படி நடவுங்கள்.

1) ............................ .................................. ..........................

2) ............................ .................................. ..........................

3) ............................ .................................. ..........................



## செயற்பாடு 04

**இப்பாடத்தில் உள்ள இறந்தகாலச் சொற்களை அட்டவணைப்படுத்துவோம்.**
**මේ පාඩමේ තිබූ අතීතකාල ක්‍රියා පද කොටුව තුළ ලියන්න.**

| | | | |
|---|---|---|---|
| 1 | ........................................ | 2 | ........................................ |
| 3 | ........................................ | 4 | ........................................ |
| 5 | ........................................ | 6 | ........................................ |
| 7 | ........................................ | 8 | ........................................ |
| 9 | ........................................ | 10 | ........................................ |
| 11 | ........................................ | 12 | ........................................ |



## செயற்பாடு 05

**ஆசிரியர் கூற மாணவர் செயற்படல்.**

1. எழும்புங்கள்.
2. புத்தகம் எடுங்கள்.
3. மூன்றாவது பாடத்தைப் படியுங்கள்.
4. புத்தகத்தை மூடுங்கள்.
5. கதிரையில் அமருங்கள்.
6. இங்கே வாருங்கள்.
7. வெண்கட்டி எடுங்கள்.
8. கரும்பலகையில் எழுதுங்கள்.
9. எழுதுவதை நிறுத்துங்கள்
10. எல்லோரும் கைத்தட்டுங்கள்.

மாணவர்களை குழுக்களாகப் பிரித்து கட்டளை பிறப்பித்து செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல்.